ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2369/32 - 2024 පෙබරවාරි මස 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.01

*2369/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி கட்டளைச்சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல. 03/2024**

மதுவரி உரிமக் கட்டணங்கள்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இதனகத்தேயுள்ள I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வருடாந்த மதுவரி உரிமக் கட்டணங்கள் 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதியன்று முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதிய 2366/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 01/2024, இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு,
2024, பெப்புருவரி 01.

1A - PG 6637 — 456 (2024/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## I ஆம் அட்டவணை

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| | உரிமத்தின் தன்மை அல்லது விபரம் | வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் ரூபா | பிணைய வைப்புத் தொகை ரூபா | கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணம் ரூபா |
| 1 | வடிசாலை உரிமம்<br>i. வடிசாலை உரிமம் (பனஞ் சாராயம் தவிர)<br>ii. வடிசாலை உரிமம் (பனஞ் சாராயம்) | <br>2,000,000<br>300,000 | <br>250,000<br>50,000 | <br>25,000,000<br>5,000,000 |
| 2 | கள்ளினை போத்தலிடல் உரிமம்<br>i. தென்னங்கள் போத்தலில் அடைத்தல்<br>ii. பனம் கள் போத்தலில் அடைத்தல் | <br>1,500,000<br>500,000 | <br>1,000,000<br>1,000,000 | <br>10,000,000<br>1,000,000 |
| 3 | வினாகிரி உற்பத்திக்கான உரிமம் | 500,000 | 50,000 | 2,500,000 |
| 4 | மில்க் பன்ச் பானம் அல்லது உவைன் உற்பத்தி, போத்தலிடல் மற்றும் விற்பனைக்கான உரிமம் | 100,000 | 50,000 | 500,000 |
| 5 | தாழை இன மரத்தின் அல்லது வேறு ஏதேனும் தாவரங்களின் இயற்கையான உற்பத்தியிலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர வேறு ஏதேனும் செயல்முறையின் மூலம் தயாரிக்கப்படும், மதுசாரத்தின் அளவு 4 சதவீதத்திற்கு மேற்படாத, ஏதேனும் தானியத்திலிருந்து தயாரிக்கப்படும், கள் தவிர்ந்த மதுபானங்களின் உற்பத்திக்கான உரிமம் | 50,000 | 50,000 | 100,000 |
| 6 | தாழை இன மரத்தின் அல்லது வேறு ஏதேனும் தாவரங்களின் இயற்கையான உற்பத்தியிலிருந்து காய்ச்சி வடித்தல் தவிர வேறு ஏதேனும் செயல்முறையின் மூலம் தயாரிக்கப்படும், மதுசாரத்தின் அளவு 4 சதவீதத்திற்கு மேற்பட்ட, ஏதேனும் தானியத்திலிருந்து தயாரிக்கப்படும், கள் தவிர்ந்த மதுபானங்களின் உற்பத்திக்கான உரிமம் | 100,000 | 50,000 | 100,000 |
| 7 | சைடர் மதுபான உற்பத்திக்கான உரிமம் | 100,000 | 50,000 | 500,000 |
| 8 | மதுபானத்தினை போத்தலில் அடைத்தலுக்கான உரிமம் | 5,000,000 | 10,000,000 | 5,000,000 |
| 9 | சேமிப்பு மற்றும் களஞ்சியசாலை (கிடங்குகள்) உரிமம் | 100,000 | 50,000 | 1,000,000 |
| 10 | கள் சேகரிப்பு நிலைய உரிமம் | 50,000 | 25,000 | 100,000 |
| 11 | மதுபான ஏற்றுமதிக்கான உரிமம் | 50,000 | 50,000 | 100,000 |
| 12 | குடிபானமல்லாத ஸ்பிரீத்து வகைகளை இறக்குமதி செய்து தம்வசம் வைத்திருப்பதற்கான உரிமம் | 100,000 | 50,000 | 100,000 |

I **ஆம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| உரிமத்தின் தன்மை அல்லது விபரம் | | வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் ரூபா | பிணைய வைப்புத் தொகை ரூபா | கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணம் ரூபா |
| 13 | உற்பத்தியாளரின் மொத்த விற்பனை சாராயம்/பியர்/வெளிநாட்டு மதுபானம் விநியோக உரிமம் | 1,500,000 | 500,000 | 2,500,000 |
| 14. | மதுபானத்திற்கான மொத்த விற்பனை உரிமம் (FL/3):<br>i. மதுபான உற்பத்தியாளர்களுக்கு<br>ii. மதுபானம் உற்பத்திசெய்யாத ஆட்களுக்கு | <br><br>2,000,000<br>2,000,000 | <br><br>1,000,000<br>1,000,000 | <br><br>1,000,000<br>2,500,000 |
| 15 | மதுபானத்தினை வெளியே விற்பனை செய்வதற்கான சில்லறை விற்பனை உரிமம் (FL/4) :<br>i. மாநகர சபை பிரதேசம்<br>ii. நகர சபை பிரதேசம்<br>iii. ஏனைய பகுதிகள்<br>iv. ரூபா 1,000 மில்லியனுக்கு மேற்பட்ட வருடாந்த புரள்வினைக் கொண்ட விண்ணப்பதாரர் நிறுவனம்/வியாபாரம் அல்லது விண்ணப்பதாரரரின் தாய் நிறுவனம்/வியாபாரம் ஆகியவற்றின் பல்பொருள் சந்தை, மளிகைக் கடைகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும் உரிமங்கள், அவற்றின் அமைவிடத்தினைப் பொருட்படுத்தாமல். | <br><br>1,000,000<br>800,000<br>600,000<br>1,500,000 | <br><br>500,000<br>500,000<br>500,000<br>500,000 | <br><br>15,000,000<br>12,500,000<br>10,000,000<br>15,000,000 |
| 16 | ஹோட்டல் உரிமம் (FL/7) சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்படாத, 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட:<br>(i) 200 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள்<br>(ii) 20 முதல் 199 வரையான அறைகள்<br>(iii) 20 இற்கு குறைவான அறைகள் | <br><br>600,000<br>300,000<br>200,000 | <br><br>100,000<br>100,000<br>100,000 | <br><br>250,000<br>200,000<br>100,000 |
| 17 | ஹோட்டல் மதுச்சாலை உரிமம் (FL/8) | 150,000 | 50,000 | 250,000 |
| 18 | திரையரங்குகளுக்கான களியாட்ட மதுச்சாலை உரிமம் (FL/9) | 100,000 | 50,000 | 250,000 |
| 19 | புகையிரத உணவுச்சாலை (FL/10) | 100,000 | 50,000 | 250,000 |
| 20 | உணவுச்சாலை உரிமம் (சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட/ அங்கீகரிக்கப்படாத உணவுச்சாலைகளுக்கான) (FL/11) | 300,000 | 100,000 | 250,000 |
| 21 | ஓய்வு விடுதி (வாடி வீடு) உரிமம் (FL12) | 200,000 | 50,000 | 250,000 |
| 22 | தனியுரிமக் கழக (கிளப்) உரிமம் (FL13) | 2,000,000 | 500,000 | 5,000,000 |

I **ஆம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | **I ஆம் நிரல்** | **II ஆம் நிரல்** | **III ஆம் நிரல்** | **IV ஆம் நிரல்** |
|---|---|---|---|---|
| | ***உரிமத்தின் தன்மை அல்லது விபரம்*** | ***வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் ரூபா*** | ***பிணைய வைப்புத் தொகை ரூபா*** | ***கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணம் ரூபா*** |
| 23 | சமூக மற்றும் பொழுதுபோக்கு கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மட்டுமேயான கழகங்கள் (FL13A)<br>i. மாநகர சபை பிரதேசம்<br>ii. நகர சபை பிரதேசம்<br>iii. ஏனைய பகுதிகள் | <br>500,000<br>400,000<br>300,000 | <br>100,000<br>100,000<br>100,000 | <br>500,000<br>500,000<br>500,000 |
| 24 | அவ்வப்போது வழங்கப்படும் உரிமம் (நாளொன்றிற்கு/மதுச்சாலை ஒன்றிற்கு) (FL/14) | 50,000 | - | - |
| 25 | விற்பனை நேரத்தினை நீடிப்பதற்கான துணை உரிமம் (வாரம் ஒன்றிற்கு) (FL/15) | 50,000 | - | - |
| 26 | ஏலதாரர் உரிமம் (நாளொன்றிற்கு) (FL/16) | 100,000 | - | - |
| 27 | சீராக்கப்பட்ட ஸ்பிரீத்துகள் விற்பனை (FL/17)/ ஏதைல் மதுசார விற்பனை | 100,000 | 100,000 | 10,000,000 |
| 28 | மருந்தாக்கப்பட்ட ஸ்பிரீத்துகள் விற்பனை (FL18) | 100,000 | 50,000 | 500,000 |
| 29 | பியர், ஏல், ஸ்ரவுட் மற்றும் உவைன் விற்பனைக்கான விசேட உரிமம் (சுற்றுலா சபையால் அங்கீகரிக்கப்பட்ட/ அங்கீகரிக்கப்படாத இடங்களுக்கான)<br>i. சில்லறை உரிமம் (FL/22A)<br>ii. விற்பனை இடத்தில் நுகர்தல் (FL/22B) | <br>100,000<br>100,000 | <br>50,000<br>50,000 | <br>250,000<br>250,000 |
| 30 | வெளிநாட்டு மதுபான உரிமத்துடன் (FL) வழங்கப்படும் சாராய உரிமங்கள்<br>i. AFL 1<br>ii. AFL 2<br>iii. AFL 3<br>iv. AFL 4 | <br>50,000<br>50,000<br>100,000<br>100,000 | <br>25,000<br>25,000<br>50,000<br>50,000 | <br>250,000<br>250,000<br>250,000<br>250,000 |
| 31 | போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனைக்கான உரிமம் | 50,000 | 100,000 | 200,000 |
| 32 | தோட்ட உணவகங்களுக்கான உரிமம்<br>i. கள்ளின் விற்பனைக்காக மாத்திரம்<br>ii. கள் மற்றும் சாராய விற்பனைக்காக | <br>50,000<br>100,000 | <br>50,000<br>100,000 | <br>100,000<br>200,000 |
| 33 | உவைன் ஸ்பிரீத்துகளின் விற்பனை | 10,000 | 5,000 | 50,000 |

I **ஆம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| I ஆம் நிரல் | | II ஆம் நிரல் | III ஆம் நிரல் | IV ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| *உரிமத்தின் தன்மை அல்லது விபரம்* | | *வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் ரூபா* | *பிணைய வைப்புத் தொகை ரூபா* | *கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணம் ரூபா* |
| 34 | பதனிடப்பட்ட சாராயத்தினை மொத்தமாக உற்பத்திசெய்து விற்பனை செய்தல் மற்றும் தயாரித்து மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குவதற்கான மதுவரி உரிமம், | நடப்பு ஆண்டின் ஓகத்து 31 ஆம் திகதியுடன் முடிவடையும் தொடர்ச்சியான பன்னிரண்டு மாதங்களில், வளாகத்தில் சாராய விற்பனை/ வெளியீடு ஆகியவற்றின் அடிப்படையில் உரிமத்தின் காலத்தின்போது கணக்கிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட விற்பனைகளின் பல்க் லீற்றருக்கு ரூபா 2/- குறைந்தபட்சம் உரிமமொன்றிற்கு ரூபா 1,500,000/- இற்கு உட்பட்டு | மதுவரி உரிமம் ஒன்றிற்கு ரூபா 20,000,000 | 25,000,000 |
| 35 | வெல்லப்பாகு(மொலாஸஸ்)/ கரும்பு சாராயத்தினை மொத்தமாக தயாரித்து விற்பனை செய்தல் மற்றும் உற்பத்தி செய்து மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குவதற்கான மதுவரி உரிமம் | | | |
| 36 | விசேட சாராயத்தினை மொத்தமாக தயாரித்து விற்பனை செய்தல் மற்றும் தயாரித்து மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குவதற்கான மதுவரி உரிமம் | | | |
| 37 | தென்னஞ் சாராயத்தினை மொத்தமாக உற்பத்தி செய்து விற்பனை செய்தல் மற்றும் தயாரித்து மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குதற்கான மதுவரி உரிமம் | | | |
| 38 | பனம் சாராயத்தினை மொத்தமாக உற்பத்தி செய்து விற்பனை செய்தல் மற்றும் தயாரித்து மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்குதற்கான மதுவரி உரிமம் | நடப்பு ஆண்டின் ஓகத்து 31 ஆம் திகதியுடன் முடிவடையும் தொடர்ச்சியான பன்னிரண்டு மாதங்களில், வளாகத்தில் சாராய விற்பனை/ வெளியீடு ஆகியவற்றின் அடிப்படையில் உரிமத்தின் காலத்தின்போது கணக்கிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட விற்பனைகளின் பல்க் லீற்றருக்கு ரூபா 2/- குறைந்தபட்சம் ரூபா 500,000/- இற்கு உட்பட்டு | மதுவரி உரிமம் ஒன்றிற்கு ரூபா 5,000,000 | 5,000,000 |

I **ஆம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| **I ஆம் நிரல்** | | **II ஆம் நிரல்** | **III ஆம் நிரல்** | **IV ஆம் நிரல்** |
|---|---|---|---|---|
| ***உரிமத்தின் தன்மை அல்லது விபரம்*** | | ***வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் ரூபா*** | ***பிணைய வைப்புத் தொகை ரூபா*** | ***கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணம் ரூபா*** |
| 39 | நாட்டுத் தயாரிப்பாகிய வெளிநாட்டு மதுபான உற்பத்திக்கான உரிமம் | நடப்பு ஆண்டின் ஓகத்து 31 ஆம் திகதியுடன் முடிவடையும் தொடர்ச்சியான பன்னிரண்டு மாதங்களில், வளாகத்தில் சாராய விற்பனை/ வெளியீடு ஆகியவற்றின் அடிப்படையில் உரிமத்தின் காலத்தின்போது கணக்கிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட விற்பனைகளின் பல்க் லீற்றருக்கு ரூபா 2/- குறைந்தபட்சம் ரூபா 5,000,000/- இற்கு உட்பட்டு | மதுவரி உரிமம் ஒன்றிற்கு ரூபா 20,000,000 | 25,000,000 |
| 40 | மோல்ட் மதுபான உற்பத்திக்கான உரிமம் | நடப்பு ஆண்டின் ஓகத்து 31 ஆம் திகதியுடன் முடிவடையும் தொடர்ச்சியான பன்னிரண்டு மாதங்களில், வளாகத்தில் சாராய விற்பனை/ வெளியீடு ஆகியவற்றின் அடிப்படையில் உரிமத்தின் காலத்தின்போது கணக்கிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட விற்பனைகளின் பல்க் லீற்றருக்கு ரூபா 2/- குறைந்தபட்சம் ரூபா 5,000,000/- இற்கு உட்பட்டு | மதுவரி உரிமம் ஒன்றிற்கு ரூபா 20,000,000 | 25,000,000 |

1. மேலே உள்ள I ஆம் அட்டவணையின் II ஆம் உப நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமக் கட்டணத்தின் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகைக்கும் இந்த அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட உரிமக் கட்டணத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு, நடப்பு ஆண்டின் மீதமுள்ள காலம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு கணிப்பிடப்படல் வேண்டும். அத்தொகையானது, இந்த மதுவரி அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செலுத்தப்படல் வேண்டும்..

2. மேலே உள்ள I ஆம் அட்டவணையின் III ஆம் உப நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைய வைப்புத் தொகையின் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகைக்கும் இந்த அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட பிணைய வைப்புத் தொகைக்கும் இடையே உள்ள வேறுபாடு, இந்த மதுவரி அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

3. மேலே உள்ள I ஆம் அட்டவணையின் IV ஆம் உப நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் நுழைவுக்கான ஒரு தடவைக் கட்டணமானது, சம்பந்தப்பட்ட உரிமம் முதலில் வழங்கப்படும்போது மீளளிக்கப்படாத கட்டணமாக, இந்த மதுவரி அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து உரிமதாரர் ஒருமுறை மட்டுமே மதுவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

EOG 03-0033

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.